රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | 75/10/GRADE III | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2024.08.05 |

அமைச்சின் செயலாளர்கள்

மாகாணத் தலைமைச் செயலாளர்கள்

ஆணைக்குழுச் செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

**<u>இலங்கை நிர்வாக சேவையில் உத்தியோகத்தர்களின் நியமனத்தை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பித்தல்</u>**

2021.08.02 ஆம் திகதியில் திறந்த அடிப்படையில் இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களது மூன்று வருட தகுதிகாண் காலம் 2024.08.02 ஆம் திகதி நிறைவடைகிறது. அதன்படி, அன்றைய தினம் குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களது நியமனத்தை உறுதிப்படுத்தத் தேவையான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒழுங்கில் உரிய ஆவணங்களை உங்களது பரிந்துரையுடன் பணிப்பாளர், (இ. நி. சே) இலங்கை நிர்வாக சேவைப் பிரிவு, பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 என்ற முகவரிக்கு அனுப்புமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

I. பணி, வருகை, நடத்தை திருப்திகரமாக இருப்பதாக நிறுவனத் தலைவரின் பரிந்துரை
II. பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் பிரமாணத்தில் 8 ஆம் இலக்கப் பின்னிணைப்பின் படி, நியமனத் திகதி / நியமனம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருட தகுதிகாண் காலம்

දුරකතන / தொலைபேசி / Telephone: 011-2696211-13, 011-2166000
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2695279
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail: info@pubad.gov.lk
වෙබ් අඩවිය / வெப்தளம் / Website: www.pubad.gov.lk

நிறைவடையும் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய வருடாந்த மீளாய்வு அறிக்கைகளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இரண்டு வீதம்.

III. இலங்கை அபிவிருத்தி நிறுவாக நிறுவனத்தின் சேவை அறிமுகப் பயிற்சியை நிறைவு செய்துள்ளமைக்காக வழங்கப்பட்டுள்ள சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் இரண்டு

IV. நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி உத்தியோகத்தர் இலங்கை அபிவிருத்தி நிறுவாக நிறுவனத்தின் சேவை அறிமுகப் பயிற்சிக்காக அறிக்கை செய்த திகதியைக் குறிக்கும் கடிதத்தின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் இரண்டு

V. உத்தியோகத்தர் சேவைக்குத் தகுதியானவர் என்பதனைக் காட்டும் சுகாதாரப் பொதுப் 169 படிவத்தின் படி வழங்கப்பட்ட மருத்துவப் பரிசோதனை அறிக்கையின் சான்றளிக்கப்பட்ட தெளிவான பிரதியொன்று

VI. உத்தியோகத்தரது முதல் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் பெறுபேறுகளை நிரூபிக்க இந்த அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட பெறுபேற்று ஆவணத்தின் தரவிறக்கம் செய்யப்பட்ட பிரதிகள் இரண்டு

VII. நிறுவனத் தலைவரினால் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 இன் படி ஏனைய உத்தியோகபூர்வ மொழித் தேர்ச்சியைப் பூர்த்தி செய்வதற்கான தேவையிலிருந்து உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்ட கடிதத்தின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் இரண்டு

ஒப்பம்/எஸ். ஆலோகபண்டார

மேலதிக செயலாளர் (பொது நிர்வாகம்) (பதில் கடமை)

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும்

உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக
தொலைபேசி : 0112-698605

தொலைநகல் : 0112-683651

மின்னஞ்சல் முகவரி: pubad.dslas@gmail.com